*கவனிக்க.*- 25.05.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1761 - 2012 ජූනි මස 01 වැනි සිකුරාදා - 2012.06.01**

*1761 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 636 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 636 |

***கவனிக்க.***- (i) பொருளாதார சேவை விதிப்பனவு (திருத்தும்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) சேர் பெறுமதி வரி (திருத்தும்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தும்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மே மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, ஆடி மாதம் 02 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, வைகாசி 08.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | ஹலி எல | ரில்பொல பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் யட்டிகின்த பிரிவில் விவாகப் (பொது/கண்டி) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், பதுளை |

6–34

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை – 2012

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்வதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் தற்போது 23 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்படி பதவிக்கு தகுதிவாய்ந்தவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

3. நியமிக்கப்படுவோரின் எண்ணிக்கை மற்றும் செயல்வலுப் பெறும் திகதி என்பன கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/பதிவாளரினால் தீர்மானிக்கப்படும். அத்துடன் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/பதிவாளர், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஏதேனும் வெற்றிடத்தினையோ அல்லது வெற்றிடங்களையோ நிரப்புவதற்குரிய அதிகாரத்தினைக் கொண்டுள்ளார்.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- 2007.08.24 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 06/2006 (iv) இன்படி, கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தரம் III, II மற்றும் I இற்கான மாதாந்த சம்பளம் பின்வருமாறு அமையும் :-

ரூபா 15,005-4 x 180-6 x 240-11 x 320-20 x 360-ரூபா 27,885.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் II இற்கான பதவி உயர்வானது ரூபா 17,485 சம்பள புள்ளியை அடைவதற்கு முன்னதாக பெறப்படுதல் வேண்டும். அத்துடன் தரம் I ஆனது ரூபா 21,045 சம்பள புள்ளிக்கு முன்னதாக பெறப்படுதல் வேண்டும்.

5. இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையது மாகும்.

6. **தகைமைகள்**.- கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தரம் III இற்குரிய தகைமைகள் பின்வருமாறு :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்கு மேற்பட்டவ ராகவும் 30 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) நல்லொழுக்கம் நிறைந்தவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) கல்விசார் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் கணிதம் மற்றும் ஏனைய இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களில் ஆகக்குறைந்தது ஒன்று உள்ளடங்கலாக அனைத்து பாடங்களிலும் (பொது பரீட்சை தவிர) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பொருளியல், கணக்கியல், வணிக புள்ளிவிபரவியல், வணிகவியல், விவசாயம், இணைந்த கணிதம் (பழைய பாடத் திட்டத்தின்கீழ் மூன்று பாடங்கள் ஒரே தடவையில்).

(உ) தொழில்சார் தகைமைகள் :

(i) தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட கணக்கியல் அல்லது கணக்காய்வு அல்லது முகாமைத்துவத்தில் டிப்புளோமா பட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(ii) AAT இறுதிப் பரீட்சை அல்லது வேறு ஏதேனும் அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ; அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து கணக்கியல் அல்லது முகாமைத்துவத்தில் டிப்புளோமா பட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

பரீட்சார்த்திகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இவ்அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான அனைத்து தகைமை களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

7. **பரீட்சை நடைமுறை :**

7.1 பரீட்சையானது, இரண்டு வினாத்தாள்களைக் கொண்டி ருக்கும். இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி பின்னர் பரீட்சையின் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு அனுமதிக் கப்பட மாட்டார்.

| | | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 7.2 | (1) நுண்ணறிவுச் சோதனை | 1 மணித்தியாலம் | 100 |
| | (2) பொது அறிவு | 1 மணித்தியாலம் | 100 |

**குறிப்பு**.- பரீட்சையானது, இத்துடன் இணைக்கப் பட்டுள்ள அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் நடாத்தப்படும். தெரிவுசெய்யப்பட்ட மாவட்டத்தினை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. போதுமானளவு பரீட்சார்த்திகள் இல்லாத விடத்து இரண்டாவதாக தெரிவுசெய்யப்பட்ட பரீட்சை நிலையத்திற்கு குறிப்பீடு செய்யப்படும் என்பதுடன் இரண்டாவதாக குறிப்பீடு செய்யும் நிலையமானது மாவட்டத்திற்கு மிக அண்மையில் காணப்படுமாயின் அத்தகைய இரண்டாவது தெரிவும் வழங்கப்பட மாட்டாது.

(i) நுண்ணறிவு சோதனை.- வினாப்பத்திரமானது, 50 வினாக்களைக் கொண்டிருக்கும். இது, பரீட்சார்த்தியின் தர்க்க சிந்தித்தலின் இயலுமை மற்றும் காரண காரிய பகுப்பாய்வு மற்றும் தீர்மானிக்கும் ஆளுமை ஆகியவற்றினை சோதிப்ப தாக அமையும். இந்தப் பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் அவற்றிற்கான குறுகிய விடை களையும் கொண்டிருக்கும்.

(ii) பொது அறிவு.- இவ்வினாப்பத்திரமானது, 50 வினாக்களைக் கொண்டிருக்கும். இது , பரீட்சார்த்தியின் தேசிய மற்றும் சர்வதேச சமூக பொருளாதார மற்றும் அரசியல் நிலவரங்கள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச கூட்டுறவு நோக்கு மற்றும் கூட்டுறவு இயக்கம் தொடர்பான அறிவினை சோதிக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. இவ்வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் அதற்கான குறுகிய விடை களையும் கோருவதாக அமையும்.

(இவ்வினாப்பத்திரமானது, பரீட்சார்த்திகள் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான தகைமைகளையும் இயலுமையினையும் சோதிப்ப தற்காக வடிவமைக்கப்பட்டதாகும்.)

இது ஓர் போட்டிப் பரீட்சையாக இருந்தபோதிலும் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்தில் சித்தியடைவதற்கு ஆகக்குறைந்தது 40% புள்ளிகளையேனும் பெறுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அவர்கள் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையில், சிறப்பு அடிப்படையில் கிடைக்கக்கூடிய வெற்றிடங்களுக்கு தெரிவுசெய்யப்படுவார்கள்.

8. **தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- விண்ணப்பமானது மிகவும் கவனமாகவும் சரியாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தி எவரேனும் இப்பரீட்சையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி, தவறான தகவல்களை வழங்கியிருப்பது பரீட்சைக்கு முன்னதாக கண்டுபிடிக்கப்படுமிடத்து அவரின் பரீட்சார்த்தி தகைமையானது இழக்கப்படுவதுடன் பரீட்சை நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் அல்லது பரீட்சையின் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து அத்தகைமையானது எந்நேரத்திலும் இரத்துச்செய்யப்படலாம். நியமனத்தின் பின்னர் ஏதேனும் தவறான தகவல்கள் வழங்கியிருப்பது கண்டுபிடிக்கப்படுமிடத்து அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஏதுவாக அமையும்.

9. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமானது ரூபா 500 ஆகும். அதனை ஏதேனுமொரு மாவட்ட செயலகம் அல்லது பிரதேச செயலகத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் இலக்க வருமான தலைப்பில் செலவு வைப்பதனூடாக செலுத்த முடியும். அதன்போது வழங்கப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும். எதிர்கால தேவை கருதி அதன் போட்டோ பிரதியினை வைத்திருப்பது சிறந்ததாகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டில் பரீட்சார்த்தியின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

10. **விண்ணப்பப்படிவம்**.- விண்ணப்பப்படிவமானது, ஏ4 அளவுத்தாளில் தயாரிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்-

(அ) கூடு 1 இலிருந்து கூடு 3 வரையில் முதல் பக்கத்தில் காணப்படுதல் வேண்டும் ;

(ஆ) கூடு 4 இலிருந்தான கூடுகள் ஏனைய பக்கங்களில் இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பப்படிவத்தினை தயாரிக்கும்போது பரீட்சையின் பெயரானது சிங்கள அல்லது தமிழ் மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

உரிய தகவல்கள் விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியிருக்காத விண்ணப்பங்கள் மற்றும் முறையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். முறையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் தொடர்பில் ஏற்படும் விளைவுகளுக்கு பரீட்சார்த்தியே பொறுப்பேற்க வேண்டும். எதிர்கால தேவை கருதி விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்றினை வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

மேலும், நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவமானது பரீட்சையின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதனை செவ்வை பார்த்தல் வேண்டும்.

**குறிப்பு**.- சில மாவட்டங்களில் போதுமானளவு பரீட்சார்த்திகள் இல்லாமையின் காரணமாக பரீட்சை நிலையங்கள் தாபிக்கப்படாத விடத்து, இரண்டாவதாக தெரிவுசெய்யப்பட்ட பரீட்சை நிலையத்திற்கு குறிப்பீடு செய்யப்படும் என்பதுடன் இரண்டாவதாக குறிப்பீடு செய்யும் நிலையமானது மாவட்டத்திற்கு மிக அண்மையில் காணப்படுமாயின் அத்தகைய இரண்டாவது தெரிவும் வழங்கப்பட மாட்டாது.

10.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளின்படி, தகுதிவாய்ந்தவர்களினால் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி விதித்துரைக்கப்பட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியவாறு விண்ணப்பத்தினை அனுப்பிவைக்கின்ற பரீட்சார்த்திகள் அனைவரையும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கான அனுமதியினை வழங்குவார். பரீட்சைக்கான அனுமதி அட்டையினை வழங்குவதானது, பரீட்சார்த்தி இப்பதவிக்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் கொண்டுள்ளார் என்பதாகாது. நேர்முகப் பரீட்சையின்போது வர்த்தமானி அறிவித்தலின்படியான தகைமைகளைக் கொண்டிருக்க வில்லையென்பது கண்டுபிடிக்கப்படுமிடத்து அவர்களின் தகைமையானது இரத்துச்செய்யப்படும்.

10.2 விண்ணப்பப்படிவத்தினைக் கொண்டுள்ள தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2012'' எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

10.3 பரீட்சார்த்தியின் ஆள் அடையாளமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரினால், சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, ஆயுதப்படைகளின் கட்டளையிடும் அதிகாரி, வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட பதவியினைக் கொண்டுள்ள பொலிஸ் சேவையிலுள்ள உத்தியோகத்தர் அல்லது அரசாங்க சேவையில் நிரந்தர பதவியினைக் கொண்டுள்ளவரும் வருடாந்தம் ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளத்தினைக் கொண்டுள்ள வருமான ஒருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

10.4 பூரணப்படுத்திய விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் கீழ்வரும் முகவரிக்கு 2012.07.04 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கப் படுதல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
அமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
பரீட்சைகள் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

11. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டதன் பின்னர் பரீட்சைகள் திணைக்களத்தினால் அறிவித்தலொன்று பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். அவ் அறிவித்தலானது, பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 2 அல்லது 3 நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பப் படிவம் மற்றும் பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய பிரதி, பதிவுத்தபாலின் சான்றுப்படுத்திய பிரதி, கொழும்புக்கு வெளியே வசிக்கும் பரீட்சார்த்தி எனின் அவரின் அனுமதி அட்டையினை அனுப்பிவைப்பதற்கான தொலைநகல் இலக்கத்துடன்கூடிய கோரிக்கைக் கடிதம் ஆகியவற்றினை அனுப்பிவைத்தல் வேண்டும்.

12. (1) பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப் படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்குமாறு கோரப்படலாம் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(2) பரீட்சார்த்திகள் பரீட்சைத் தினத்தன்று உறுதிப்படுத்திய அனுமதி அட்டையினை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்குமாறு கோரப்படுவார்.

13. பரீட்சைக்கான அனுமதி அட்டையினை வழங்குவதானது, பரீட்சார்த்தி இப்பதவிக்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் கொண்டுள்ளார் என்பதாகாது. அனைத்து பரீட்சார்த்திகளும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் அனைத்து விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். பரீட்சார்த்தியானவர் இத்தகைய விதிகளில் ஏதேனுமொன்றினை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தண்டனைக்குள்ளாக நேரிடும்.

14. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயமானது, கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரினால் தீர்மானிக்கப்படும்.

15. அனைத்து பரீட்சார்த்திகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பொதுவான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

டபிள்யூ. எச். கருணாரத்ன,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
இல. 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
2012.05.15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

Open Competitive Examination for Recruitment of Co-operative Development Officer - Grade III - 2012

☐

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்கான மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐

(உரிய இலக்கத்தினை கூட்டில் எழுதவும்.)

*வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டவாறு பரீட்சைக்குத் தோற்றும் மாவட்டத்தின் இலக்கத்தினைக் குறிப்பிடுக.

| மாவட்டம் | மாவட்ட இல. |
|---|---|
| 1. | |
| 2. | |

(பரீட்சை நிலையங்கள் தாபிக்கப்படும் மாவட்டங்களையும் அவற்றின் இலக்கங்களையும் அட்டவணை 1 இல் காண்க.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
உதாரணம் : PERERA, A.B.C

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. 3.1 பால் :
ஆண் - 1
பெண் - 0 ☐

(உரிய இலக்கத்தை கூட்டில் இடவும்)

4. பிறந்த திகதி :-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

2012.07.04 ஆந் திகதியன்று வயது :-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5. கல்விசார் தகைமைகள் :-

5.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை விபரங்கள் :-

(i) பரீட்சை ஆண்டும் மாதமும் :
(ii) சுட்டெண் :
(iii) பரீட்சை பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

5.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை விபரங்கள் :-

(i) பரீட்சை ஆண்டும் மாதமும் :
(ii) சுட்டெண் :
(iii) பரீட்சை பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5.3 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்தான பட்டம் :

(i) பல்கலைக்கழகம் :
(ii) பட்டம் :
(iii) பரீட்சை ஆண்டு :

தொழில்சார் தகைமைகள் :

(i) ........................................................................
(ii) ........................................................................
(iii) ........................................................................

7. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டீர்களா ? :----.

☐ ஆம் ☐ இல்லை

(ஆமெனில் விபரங்களைத் தருக.) :----.

8. பரீட்சைக் கட்டண கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டு விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை : ரூபா ----.

பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டுக.

(எதிர்கால தேவை கருதி போட்டோ பிரதியொன்றினை வைத்திருக்கவும்)

9. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :-**

(அ) இந்த விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானதும் சரியானதுமென உறுதிமொழிகின்றேன். இந்த விண்ணப் பத்தில் ஏதேனும் பிரிவினை நிரப்புவதற்கு தவறியமை/ தவறாக நிரப்பியமை தொடர்பில் ஏற்படும் ஏதேனும் இழப்புகளுக்கு நானே பொறுப்பு என இத்தால் உறுதிப் படுத்துகிறேன். மேலும் இந்த விண்ணப்பத்தில் உள்ள அனைத்து பிரிவுகளையும் சரியாக நிரப்பியுள்ளேன் என நான் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

(ஆ) தவறான தகவல் எதனையும் வழங்கி அது தெரிவுக்கு முன்னால் நிரூபிக்கப்படுமிடத்து எனது பரீட்சார்த்தி தகைமையினை இழப்பேன் என்றும் தெரிவின் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து பதவியிலிருந்து நீக்கப்படு வேன் என்பதனை நானறிவேன்.

(இ) பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு நான் கட்டுப்பட்டு நடப்பதற்கும் இணங்குகிறேன்.

(ஈ) இதில் உள்ளடங்குகின்ற ஏதேனும் விபரங்களில் மாற்றம் எதனையும் மேற்கொள்ள மாட்டேன் என்றும் உறுதி யுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. (அ) **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப் படுத்துதல் :**

இவ்விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/ செல்வி ................................ என்பவரை தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன் என்றும் குறித்துரைக் கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தினை அவர் செலுத்தி பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளார் என்றும் இவர் தனது கையொப்பத்தினை என் முன்னிலையில் வைத்துள்ளார் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்படுதல் வேண்டும்.)

**அட்டவணை**

பரீட்சை நடாத்தப்படவுள்ள நிலையங்கள் அமைந்துள்ள நகரங்கள் :

| மாவட்ட இல. | மாவட்டம் |
|---|---|
| 1 | கொழும்பு |
| 2 | கம்பஹா |
| 3 | களுத்துறை |
| 4 | மாத்தளை |
| 5 | கண்டி |
| 6 | நுவரெலியா |
| 7 | காலி |
| 8 | மாத்தறை |
| 9 | ஹம்பாந்தோட்டை |
| 10 | யாழ்ப்பாணம் |
| 11 | மன்னார் |
| 12 | முல்லைத்தீவு |
| 13 | வவுனியா |
| 14 | திருகோணமலை |
| 15 | மட்டக்களப்பு |
| 16 | அம்பாறை |
| 17 | புத்தளம் |
| 18 | குருநாகல் |
| 19 | அநுராதபுரம் |
| 20 | பொலன்னறுவை |

| மாவட்ட இல. | மாவட்டம் |
|---|---|
| 21 | பதுளை |
| 22 | மொனராகலை |
| 23 | கேகாலை |
| 24 | இரத்தினபுரி |
| 25 | கிளிநொச்சி |

6-88

---

**அரசசேவை ஆணைக்குழு**

இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை - 2011 (2012)

இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பில் இருந்து விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை, 2012, செத்தெம்பர் மாதம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பில் 4 வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

2. விசேட வகுப்பு அலுவலர்கள் தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள சம்பளத் திட்டம் செல்லுபடியாகும் :-

(MN-7-2006-A 4 ஆம் படிமுறை)

ரூபா 21,125-8 X 365 - 18 X 500 - ரூபா 33,045

**3. இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I இல் இருந்து விசேட வகுப்பிற்கான தரமுயர்வு பின்வரும் வகையில் மேற்கொள் ளப்படும் :**

(அ) விசேட வகுப்பிலுள்ள வெற்றிடங்களில் 40%, I ஆம் வகுப்பிற்கு தரமுயர்வு வழங்கப்பட்ட திகதியில் இருந்து 4 வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்ட உரிய பரீட்சையில் சித்தியடைந்த அலுவலர்கள் மூலம் நிரப்பப்படும்.

(ஆ) விசேட வகுப்பிற்கான வெற்றிடங்களில் 60%, 6 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட தரமுயர்வு வழங்கப்பட்ட தினத்திற்கு கிட்டிய 5 வருடகாலப் பகுதியில் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்ட அலுவலர் களின் சேவை மூப்பினதும் திறமைகளினதும் அடிப்படையில் நிரப்பப்படும்.

(இ) விசேட வகுப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கை 5 ஐவிடக் குறைவாக இருப்பின் மேற்படி (அ) மற்றும் (ஆ) உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள வீதங்கள் பொருத்தமற்றதாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அலுவலர்களின் சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் குறித்த வெற்றிடங்கள் நிரப்பப்படுதல் வேண்டும்.

(ஈ) விசேட வகுப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கை 5 அல்லது அதனைவிடக் கூடுதலாக இருப்பினும் அவ்வருடத்தில் ஏற்பட்ட பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 4 அல்லது அதனைவிடக் குறைவாக இருப்பின் தகுதிபெறும் அலுவலர்களின் சேவைமூப்பு மற்றும் திறமையின் அடிப்படையிலேயே பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும்.

(உ) விசேட வகுப்பிலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவ தற்காக வருடாந்தம் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகள் அவ்வருடத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும்.

(ஊ) மேலே (அ) மற்றும் (ஆ) ஆகிய உப பந்திகளிற்கு இணங்க பதவி வெற்றிடங்களை நிரப்பும்போது முதலில் (ஆ) பந்தியில் உள்ள வெற்றிடங்களும் இரண்டாவதாக (அ) பந்தியின் கீழான பதவி வெற்றிடங்களும் நிரப்பப்படல் வேண்டும்.

(எ) இலங்கை தொழில்நுட்ப சேவையின் I முதலாம் வகுப்பிலுள்ள அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்தும்போது திறமைகளை அளவிடுவதற்காக அரசசேவை ஆணைக்குழு வின் அனுமதியுடன் தயாரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் திட்டத்தினை குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் சேர்ப்பதற்கு திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சை தொடர்பில் அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

(ii) இச்சட்டங்களை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் கட்டுப்படவேண்டிய நிலை உருவாகும். பரீட்சார்த்திகள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் வர்த்தமானியின் முதற்பகுதியில் தனியாக பிரசுரிக் கப்பட்டுள்ளன.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தைத் தயாரித்தல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும் மாகாண அரச சேவையிலுள்ள அலுவலர்கள் அவர்கள் பணிபுரியும் மாகாண சபையின் அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும் 2012, யூலை 02 ஆந் திகதிக்கு முன்னர், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை எழுதுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. **அடையாள அட்டைகள்.**- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்று கின்ற ஒவ்வொரு பாடத்திலும் மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய வகையில் தமது ஆள் அடையாளத்தை விண்ணப்பதாரர்கள்

உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களில் ஒன்றையேனும் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் பரீட்சைக்குத் தோற்றும் தகைமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் அடிப்படையில் இரத்துச் செய்யப்பட முடியும்.

7. **விண்ணப்பப்படிவம்**.- (i) ''ஏ4'' அளவிலான தாளில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். 1 முதல் 5 வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சு மூலம் தயாரித்துக்கொள்ள முடியுமாயினும் அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் கையெழுத்தில் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் தாம் தோற்றும் மொழி மூலத்தில் விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். அதனால், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் இவ்அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்விண்ணப்பப்படிவத்தின் படிமப் பிரதியொன்றை வைத்திருப்பது சாலவும் சிறந்ததாகும்.

(ii) பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து அம்மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளித்தல் வேண்டும்.

(iii) முதற்தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறாயினும் அதன் பின்னர் தோற்றும் அலுவலர்கள் ரூபா 500 ஐப் பரீட்சைக் கட்டணமாக 2003-02-13 என்ற பரீட்சைத் திணைக்களத்தின் வருமானத் தலைப்புக்கு யாதேனும் பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்ட செயலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும்.

இப்பரீட்சைக்காகச் செலுத்திய கட்டணத்தை வேறு ஏதேனும் பரீட்சைக்கு மாற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

8. பரீட்சைக்கு விண்ணப்பித்த அலுவலர்கள் அனைவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணையும் பரீட்சை அனுமதி அட்டையும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்தினால் செய்தித் தாள்களில் அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்படும். அவ்அறிவித்தல் பிரசுரமாகி 2-3 நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அது தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள விபரங்களுடன் ''பரீட்சை ஆணையாளர், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு உடனடியாக எழுத்துமூலம் (தந்தி முகவரி : ''பரீட்சைகள், கொழும்பு'') அறிவித்தல் வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் ;
(iii) முழுமையான விலாசம் ;
(iv) விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பிய அலுவலகம், பதிவுத்தபால் இலக்கம் மற்றும் அனுப்பிய திகதி.

உம்மிடமுள்ள விண்ணப்பத்தின் படிமப் பிரதியையும் பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டினையும், நீங்கள் கொழும்புக்கு வெளியில் வசிப்பவராயின் அனுமதி அட்டையை அனுப்பவேண்டிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தையும் குறிப்பிட்டு உமது கோரிக்கைக் கடிதத்தின் பிரதியொன்றை உம்மிடம் வைத்துக்கொண்டு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

9. மேலே (8) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

10. **பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்**.- இலக்கம் 5 இன்கீழ் மாகாண அரச சேவையிலுள்ள அலுவலர்களின் பெறுபேறுகளை உரிய மாகாண அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கும் அரச சேவையிலுள்ள அலுவலர்களின் பெறுபேறுகளை பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கும் அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

11. **பரீட்சை நடைமுறைகள்**.- (i) I ஆம் வகுப்பிலுள்ள அலுவலர்களை விசேட வகுப்புக்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை 2 வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :-

(1) உளச்சார்புப் பரீட்சை (நேரம் : 1 1/2 மணித்தியாலம்)
(2) முகாமைவத்துவம் (நேரம் : 2 1/2 மணித்தியாலம்)

தகுதிபெறுவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

முதலாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு :-

உளச்சார்பு-பாட இலக்கம் (1).- இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்திகளின் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு செய்யும் ஆற்றல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றை அளவிடக்கூடியதாக அமையும்.

இவ்வினாப்பத்திரத்தில் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

*இரண்டாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு :-*

முகாமைத்துவம்-பாட இலக்கம் (2) :

(i) முகாமைத்துவம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள்
(ii) முகாமைத்துவ தொழிற்பாடுகள் :

திட்டமிடல்
தீர்மானம் எடுத்தல்
தீர்மானம் எடுக்கும் நடைமுறைகள்
ஒழுங்கமைப்பு
பதவிநிலைப்படுத்தல்
செயற்படுத்தல்
ஊக்குவிப்புச் செயற்பாடுகள்
நிர்வாகம்
நிர்வாகக் கோட்பாட்டுச் செயற்பாடுகள்

(iii) பங்குபற்றல் முகாமைத்துவம்
(iv) முகாமைத்துவச் சூழல்
(v) விடய ஆய்வு

இது ஒரு கட்டமைப்பு வினாப்பத்திரமாகும். இதில் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

12. இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் காணப்படாத யாதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானதாக அமையும்.

13. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் யாதேனும் இணக்கப்பாடின்மை காணப்படுமாயின் சிங்கள மொழியிலுள்ள வாசகமே செல்லுபடியானதாகும்.

அரசசேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலகப் பயன்பாட்டுக்குரியது)

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை - 2011 (2012)**

## Examination for the Promotion of the Officers in Class I of Sri Lanka Technological Service to Special Class - 2011 (2012)

1. (அ) பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
(சிங்களம்-2/தமிழ்-3/ஆங்கிலம்-4)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

(ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்களை இறுதியில் எழுதுக (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) : ----.
உதாரணம் : SILVA, A.B.

(இ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.

(ஈ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ----.

(உ) அலுவலக முகவரி (இம்முகவரிக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்படும்)
(ஆங்கிலத்தில்) :----.
(சிங்களத்தில்/ தமிழில்) :----.

(ஊ) பால் (ஆண்-0/பெண்-1) :
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

(எ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :

(ஏ) தொலைபேசி இலக்கம் :

2. நீர் மாகாண அரச சேவையிலுள்ளவரா ? அல்லது அரச சேவையிலுள்ளவரா ? என்பது :----.

(அரச சேவை-1/மேல் மாகாண அரச சேவை-2/தென் மாகாண அரச சேவை-3/ மத்திய மாகாண அரச சேவை-4/ வடமேல் மாகாண அரச சேவை-5/சப்ரகமுவ மாகாண அரச சேவை-6/ ஊவா மாகாண அரச சேவை-7/ வடமத்திய மாகாண அரச சேவை-8/வடமாகாண அரச சேவை-9/கிழக்கு மாகாண அரச சேவை-10)

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

3. நீர் பணிபுரியும் திணைக்களம் :----.

4. பதவிப் பெயர் :----.

5. (i) பிறந்த திகதி-

ஆண்டு மாதம் திகதி

(ii) 2011.01.01 இல் வயது-

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை அல்லாதவிடத்து பரீட்சைக் கட்டணமான ரூபா 500 ஐச் செலுத்திய பற்றுச்சீட்டினை இவ்விடத்தில் நன்றாக ஒட்டுக. (பற்றுச்சீட்டின் படிமப் பிரதியொன்றை தம்மிடத்தில் வைத்திருக்கவும்.

செலுத்திய அலுவலகம் :----.

மேலே குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை என்றும், மேல்குறிப்பிட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துள்ளது என்றும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் பிரகடனப்படுத்துகின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

***குறிப்பு.-*** *தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவரின் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் அல்லது தனது பிரதேச அலுவலகத் தலைவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடுதல் வேண்டும்.*

**கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

*எனது அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவருமான திரு./ திருமதி/ செல்வி .................................................. என்பவர் .................................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.*

----,
*கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்*
*கையொப்பம்.*
*(உத்தியோகபூர்வ முத்திரை)*

***திணைக்களத் தலைவரின் சான்றிதழ்***

*மேலே இல. 1 முதல் 5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும் இப்பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவர் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியானவர் என்பதையும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் சான்றுபடுத்துகிறேன்.*

----,
*திணைக்களத் தலைவரின் கையொப்பமும்*
*பதவிப்பெயரும்.*
*(உத்தியோகபூர்வ முத்திரை)*

*திகதி :----.*

***குறிப்பு.-*** *உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று பரீட்சார்த்தியின் தனிப்பட்ட கோவைக்கு அனுப்பப்பட வேண்டும். மற்றைய பிரதி காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.*

*6-113*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2012**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 01.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.05.2012 |
| | | வெள்ளி | 08.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.05.2012 |
| | | வெள்ளி | 15.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.06.2012 |
| | | வெள்ளி | 22.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.06.2012 |
| | | வெள்ளி | 29.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.06.2012 |
| **யூலை** | .. | வெள்ளி | 06.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.06.2012 |
| | | வெள்ளி | 13.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.06.2012 |
| | | வெள்ளி | 20.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.07.2012 |
| | | வெள்ளி | 27.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.07.2012 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 03.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.07.2012 |
| | | வெள்ளி | 10.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.07.2012 |
| | | வெள்ளி | 17.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.08.2012 |
| | | வெள்ளி | 24.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.08.2012 |
| | | வியாழன் | 30.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.08.2012 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*